தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

சனிக்கிழமை, 1983 பிப்ரவரி 12.

தை 30, துந்துபி—திருவள்ளுவர் ஆண்டு 2014.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகுந்தன்
ஒன்னார் விழையும் சிறப்பு.''

துன்பத்தையே ஒருவன் இன்பமாகக் கருதிக் கொள்வானானால், அவனுடைய பகைவரும் விரும்பிப் போற்றும் மதிப்பு அவனுக்கு உண்டாகும்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 242, 243 மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.

சித்தன்னவாசல் குகைக்கோவிலை சுற்றுலாத் தலமாக்கும் திட்டம்.

*வினா எண். 244—திரு. பெ. திருமாறன்: மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம் சித்தன்னவாசல் குகைக் கோவிலை சுற்றுலா மையமாக்க அரசுக்கு திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் : மாவட்ட உலாத் தலங்கள் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக புதுக்கோட்டை மாவட்டத்தில் சித்தன்னவாசல் தேர்ந்தெடுக்கப்பட்டு சுற்றுலாத்தலமாக அபிவிருத்தி செய்வதற்கான கருத்துருக்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

திரு. பெ. திருமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே; புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள சித்தன்னவாசல் என்ற அந்தக் குகைக்கோவில் கி. மு. 2 ஆம் நூற்றாண்டில் பல்லவர்களால் ஏற்படுத்தப்பட்டது. அந்தக் குகைக்கோவிலில் உள்ள

சிற்பங்கள் மிகவும் ஓவியக்கலையில் சிறப்பு பெற்றதாகவும், அதனுடைய கலர் இன்னும் அழியாமல் அது சிறப்பாக விளங்கிக் கொண்டு வருகிறது. ஆகவே அங்கே சுற்றுலாத் தலமாக்க அரசு எந்த வகையில் திட்டம் போட்டிருக்கிறது? அதற்கு எவ்வளவு ரூபாய் மதிப்பீடுத் தொகை ஒதுக்கி அந்த திட்டத்தை அரசு நிறைவேற்றும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே போகின்ற சுற்றுலாப் பயணிகளுக்கும் பொது மக்களுக்கும் தேவையான அடிப்படை வசதிகளை செய்து தருவதற்கு முதலில் சுமார் $3\frac{1}{2}$ லட்சம் ரூபாய் செலவில் திட்டம் போடப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டதற்குப் பிறகு அதை மேலும் அபிவிருத்தி செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

திரு. பெ. திருமாறன்: பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்திலே வேறு எந்தக் கோவிலையாவது சுற்றுலாத் துறைக்கு எடுத்துக்கொள்ள அரசிடம் திட்டம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, சித்தன்னவாசலுக்கு அடுத்தபடியாக விராலிமலையை மாவட்ட சுற்றுலாத்தலமாக எடுத்துக்கொண்டு திட்டம் நிறைவேற்றுகிற ஒரு கருத்துரு அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

புதுக்கோட்டை தேவஸ்தானத்தில் பணிபுரியும் ஆலய ஊழியர்களுக்கான ஊதிய உயர்வு.

*வினா எண். 245—திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான்: திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

புதுக்கோட்டை தேவஸ்தானத்தில் பணிபுரியும் ஆலய ஊழியர்களுக்கு அரசால் அறிவிக்கப்பட்ட ஊதிய உயர்வு அளிக்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: புதுக்கோட்டை திருக்கோயில்களின் ஊழியர்களுக்கு 1—7—82 முதல் இதுவரை அடிப்படைச் சம்பளம் ரூ. 10-க்குக் குறைவாக வாங்கி வருபவர்களுக்கு அடிப்படைச் சம்பளம் ரூ. 10 என நிர்ணயித்து வழங்கவும், அடிப்படைச் சம்பளம் ரூ. 10-க்கு மேல் பெறுபவர்களுக்கு அந்நிலைப்படியில் ரூ. 10 உயர்வு செய்து வழங்கவும், இந்து அறநிலைய ஆட்சித் துறை ஆணையரால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.